DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 62 /2017

Deposition of Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயக்குமார் | Father's/Husband's Name : | கார்மேகம் |
| Village | : உசிலம்பட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : நீதிமன்ற ஆணையர் |
| Religion | : | Age | : 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2026

**முதல் விசாரணை** :

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRP(MD)No.1794/2025 வழக்கில் கடந்த 07.07.2025ம் தேதி ஏற்பட்ட உத்தரவின் பேரில் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் நான் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டு தாவா சொத்தை சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து, அதன் அடிப்படையில் எனது அறிக்கை மற்றும் வரைபடத்தையும் கடந்த 22.03.2022ம் தேதி தாக்கல் செய்திருக்கிறேன். எனது அறிக்கை மற்றும் வரைபடம், சர்வேயர் அறிக்கை வரைபடம் ஆகியவை இந்த வழக்கில் ஏற்கனவே நீ.ம.சா.ஆ.1 முதல் 3 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது.

(உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் வாதி தரப்பு ஆணையரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) தாவா சொத்தை பிர்கா சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்வதற்காகத் தான் நீதிமன்றத்திலிருந்து எனக்கு வாரண்ட் வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனது வாரண்டில் வாதி மற்றும் பிரதிவாதிகளின் ஆவணங்களை பார்த்து அதன் அடிப்படையில் அளவீடு செய்யும்படி எந்த உத்தரவும் இல்லை என்றால் சரிதான். வழக்குரையிலும், எனது வாரண்டிலும் குறிப்பிட்டுள்ள 2 அயிட்ட சொத்துக்கள் சம்பந்தமாக அறிக்கை தாக்கல் செய்தவற்காக எனக்கு வாரண்ட் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு கொடுக்கப்பட்ட வாரண்டில் 2 அயிட்ட சொத்திற்கு மேற்கு பக்கம் மூக்கம்மாள் இடம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.2 எனது வரைபடத்தில் வாதி மற்றும் பிரதிவாதியின் ஆவணத்தை

பரிசீலித்து அதன் அடிப்படையில் மாதிரி வரைபடம் தாக்கல் செய்திருக்கிறேனோ என்றால் ஆமாம்.

2) நீ.ம.சா.ஆ.1 பக்கம் 2ல் நான் குறிப்பிட்டுள்ள நான்குமால் எதன் அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்று கேட்டால் தாவா சொத்தை அளவீடு செய்த போது தெரிந்த விபரத்தை வைத்து அந்த நான்குமாலை குறிப்பிட்டிருக்கிறேன். மேற்கு பக்கம் மாலாக குறிப்பிட்டுள்ள மூக்கம்மாளின் இடம் எந்த சர்வே எண்ணில் கட்டுப்பட்டுள்ளது என்ற விபரத்தை சர்வேயரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், சர்வே எண்.477/1A1A1. ஆனால் சர்வேயர் கொடுத்த புலப்படத்தில் மேற்கு பக்க மாலில் உள்ள இடத்தின் சர்வே எண்ணாக 477/1A1A4 என குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். சர்வேயர் கொடுத்த புலப்படத்தில் மேற்கு பக்கம் சர்வே எண்.477/1A1A4 என்பதை மறைத்து எனது அறிக்கையில் மேற்கு பக்கம் சர்வே எண்.477/1A1A1 முத்தன் வகையறா நிலம் என்று தவறாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல.

3) சர்வே எண்.477/1A1A1ல் உள்ள இடம் முத்தன் வகையறாவிற்கு பாத்தியம் என்று எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் சர்வேயர் ஆவணத்தை காட்டி என்னிடம் சொன்னார். நீ.ம.சா.ஆ.3 சர்வேயர் வழங்கிய புலப்படத்தில் தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள சொத்திற்கு மேற்கு பக்கம் தான் சர்வே எண்.477/1A1A1 இருக்கிறது என்றால் தாவா சொத்தின் சிறு பகுதிக்கு மேற்கு பக்கமும் சர்வே எண்.477/1A1A1 இருக்கிறது, பெரும்பகுதி சர்வே எண்.477/1A1A4க்கு கிழக்கு பக்கம் இருக்கிறது. எனது அறிக்கையில் வாதி மற்றும் பிரதிவாதியின் இடத்திற்கு மேற்கு பக்கம் சர்வே எண்.477/1A1A1 முத்தன் வகையறா நிலம் என்று தான் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். வாதி சொத்திற்கு மேற்கு பக்கம் சர்வே எண்.477/1A1A1 இல்லை என்றாலும் சர்வே எண்.477/1A1A4 தான் இருக்கிறது என்றாலும் அதை மறைத்து பிரதிவாதிக்கு ஆதரவாக எனது அறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

4) நீ.ம.சா.ஆ.2 எனது வரைபடத்தில் வாதி மற்றும் பிரதிவாதி இடம் என்று இரண்டு நிறங்களில் குறித்து நான் வரைபடம் தாக்கல் செய்திருப்பதால் தான் இந்த வழக்கில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.2 வரைபடம் வாதி மற்றும்பிரதிவாதி ஆவணத்தின் அடிப்படையில் அளவீடு செய்து தான் தாக்கல்

செய்திருக்கிறேன். பிரதிவாதியின் கிரைய ஆவணத்தில் தெற்கு பக்கம் மணி மற்றும் ஈஸ்வரன் இடம் என்று குறிப்பிட்டுள்ளது என்றாலும் எனது அறிக்கையில் தெற்கு பக்கம் அர்ஜுனன் வீடு என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். வாதி மற்றும்பிரதிவாதியின் இடத்தின் நான்குமாலை சரியாக பரிசீலித்து முறையான அறிக்கை தாக்கல் செய்திருந்தால் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டதற்கான பயன் முடிவு பெற்றிருக்கும் என்றாலும் அதற்கு மாறாக ஒரே இடத்திற்கு 2 வரைபடங்களை தாக்கல் செய்து குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதியின் ஆவணத்தில் இருவரின் சொத்திற்கும் வேறு வேறு நான்குமால் இருப்பதை பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் கிழக்கு மற்றும் வடக்கு பொதுநடைபாதை இருவருக்கும் ஒரே நான்குமால் தான்.

5) மேற்கு மற்றும் தெற்கு நான்குமால் இருவருக்கும் வேறு வேறு என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை தெரிந்து கொண்டு ஒரே இடத்தை இருவருக்கும் அளந்து காட்டியது கமிஷனர் வாரண்டிற்கு விரோதமானது என்றால் சரியல்ல. சர்வேயர் எவ்வாறு தாவா சொத்தை கண்டறிந்து அளவீடு செய்தார் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, அந்த அறிக்கையில் தெளிவாக சொல்லியிருக்கிறேன். சர்வேயர் தாவா சொத்தை Check measure செய்து அளவீடு செய்தாரா என்றால் இல்லை, அளவை கல் இருந்ததால் Check measure செய்யவில்லை. எனது அறிக்கை சர்வேயர் அறிக்கை, மற்றும் வரைபடத்திற்கும், இயற்கை அமைப்பிற்கும் விரோதமாக இருப்பதாலும் எனக்கு வழங்கப்பட்ட வாரண்டிற்கு விரோதமாக இருப்பதால் எனது அறிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) இடைநிலை மனு எண்.3/2021 என்ற மனுவில் ஏற்பட்ட உத்தரவின் பேரில் தான் நான் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டேன். மேற்படி உத்தரவில் " Commissioner is directed to inspect the suit property note down the physical features and the measure the same with the help of VAO and qualified Surveyor and correlate the documents produced on either side"என்று உள்ளது என்றால் சரிதான். ஆனால் எனக்கு வழங்கி யவாரண்டில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு வாரண்டில் குறிப்பிடாத போது நீதிமன்றம்பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் நான்

செயல்படலாம் என்றால் சரிதான். உத்தரவை நான் படித்து பார்த்தேன். அதன் அடிப்படையில் தான் வாதி மற்றும் பிரதிவாதி தங்களது கிரைய பத்திரங்களை என்னிடம் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

2) வாதி, பிரதிவாதி மற்றும் சர்வேயர் சேர்ந்துதான் நான் அளவீடு செய்த இடத்தை தேர்ந்தெடுத்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அளவீடு செய்யும் போது வாதி அல்லது பிரதிவாதிகள் இந்த இடம் எங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்று எந்த ஆட்சேபணையும் என்னிடம் தெரிவிக்ககவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே கட்டப்பட்ட வீட்டின் அருகில் இருந்த அளவைக்கல்லின்படி அளவீடு செய்த போது அவ்வாறு அளக்கக் கூடாது என்றும் Check measure படி தான் அளக்க வேண்டும்என்றும் யாரும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் எதற்காக ஒரே வபைடத்தில் இரண்டு நிறங்களை குறிப்பிட்டு காட்டியிருக்கிறேன் என்றால் தனித்தனியாக காண்பித்தால் குழப்பம் ஏற்படும் என்பதற்காக ஒரே வரைபடத்தில் இரண்டு நிறங்களில் குறித்து காட்டியிருக்கிறேன்.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 07.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.04.07 16:30:02 +0530

District Munsif,
Aundipatti.